




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஆகஸ்ட். 25, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 322 ❖ ரூ.10


## உலகக் கோப்பை செஸ் இறுதிப் போட்டியில் கார்ல்சன்

# சாம்பியன்

## முழு தேசமும் உங்களை நினைத்து பெருமை கொள்கிறது பிரக்ஞானந்தா: மு.க.ஸ்டாலின் வாழ்த்து

பிடே, ஆக. 25-

உலக கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் உள்ள பாகு என்ற நகரில் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதியில் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா உலக தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பேபியானோ கருணாவுடன் மோதினார். அரையிறுதி சுற்றில் இரண்டு போட்டிகள் நடைபெற்றன.





இந்த போட்டிகள் 'டிரா' ஆனது. இதைத் தொடர்ந்து டை-பிரேக்கர் சுற்று நடத்தப்பட்டு, இதில் வெற்று பெறுவோர் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நிலை உருவானது. அதன்படி டை-பிரேக்கர் சுற்றில் பிரக்ஞானந்தா, உலகின் மூன்றாம் இடத்தில் வீரரான ஃபேபியானோ கருணாவை எதிர்கொண்டு விளையாடினார்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் பிரக்ஞானந்தா தன்னை எதிர்த்து விளையாடிய கருணாவை 3.5-2.5 புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் உலக கோப்பை செஸ் தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இளம் வீரர் என்ற பெருமையை பிரக்ஞானந்தா பெற்றார். இறுதிப் போட்டியில் பிரக்ஞானந்தா மேக்னஸ் கார்ல்சனுடன் மோதினார். இறுதிப் போட்டியின் முதல் இரண்டு சுற்றுகள் சமனில் முடிந்தன. இதைத் தொடர்ந்து நேற்று டை பிரேக்கர் சுற்று நடைபெற்றது. இதில் பிரக்ஞானந்தா வெள்ளை நிற காய்களுடன் விளையாடினார். மேக்னஸ் கார்ல்சன் மற்றும் பிரக்ஞானந்தா இடையிலான டை பிரேக்கர் சுற்றின் முதல் போட்டி பரபரப்பாக நடைபெற்றது. இதில் கார்ல்சன் வெற்றி பெற்றார்.

இதைத் தொடர்ந்து இரண்டாவது சுற்று துவங்கியது. இந்த சுற்றும் 25 நிமிடங்கள் நடைபெற்றது. இதில் பிரக்ஞானந்தா கருப்பு நிற காய்களுடன் விளையையாடினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த சுற்றும் சமனில் முடிந்தது. அந்த வகையில் மேக்னஸ் கார்ல்சன் முதல் சுற்றில் வெற்றி பெற்று இருந்ததால், சாம்பியனாக அறிவிக்கப்பட்டார். இந்நிலையில், செஸ் உலகக் கோப்பையில் 2வது இடம் பிடித்த பிரக்ஞானந்தாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:- 2023ம் ஆண்டின் செஸ் உலகக்கோப்பையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்னையின் பெரும் பிரக்ஞானந்தாவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். உலகின் நம்பர் 2 வீரரான நகமுரா மற்றும் நம்பர் 3 வீரரான கருவானாவை தோற்கடித்து, இறுதிப் போட்டிக்கான பயணம் எங்களை வியப்பில் ஆழ்த்தியது. இறுதி முடிவு இருந்தபோதிலும், உங்கள் சாதனை 140 கோடி கனவுகளுடன் எதிரொலித்தது. முழு தேசமும் உங்களை நினைத்து பெருமை கொள்கிறது பிரக்ஞானந்தா! நீங்கள் பெற்ற வெள்ளிப் பதக்கம் மற்றும் செஸ் உலகக்கோப்பை போட்டிக்கான நுழைவு ஆகியவை வரவிருக்கும் தலைமுறையினரை ஊக்குவிக்கும் மைல்கற்கள். இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் 75-ஆம் ஆண்டு பவள விழா நிறைவை முன்னிட்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், தருமபுரம் ஆதீனத்தின் 27-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் பவளவிழா நினைவு ஸ்ரீலஸ்ரீ கயிலை நட்சத்திர குருமணிகள் கலையரங்கத்தில் திருக்குறள் உரைவளம் நூலை வெளியிட்டார். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் பன்னீர்செல்வம், நிவேதா எம். முருகன், ராஜ்குமார், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளீதரன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் மகாபாரதி, தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. சாமிநாதன், செயலாளர் முனைவர் இரா. செல்வநாயகம், இந்து சமய அறநிலையத் துறை உயர்நிலை குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒரு சிறிய வதந்திதான் மிகப்பெரிய பிரச்சனைகளை சமூகத்தில் உருவாக்குகிறது : அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை , ஆக. 25-

ஒரு சிறிய வதந்திதான் மிகப்பெரிய பிரச்சனைகளை சமூகத்தில் உருவாக்குகிறது என மாநிலநாட்டுநலப்பணித் திட்டம் சார்பில் நேற்று நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றி உள்ளார்.



இளைஞர்களை அதிகம் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் அதிகம் இளைஞர்களை கொண்ட 10 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. வெறும்எண்ணிக்கையின் என்ற அளவில் மட்டுமில்லாமல், இங்கு இருக்கின்றஇளைஞர்கள், இளம்பெண்கள் திறமைசாலிகள் மற்றும் தனித்துவம் மிக்கவர்களாக உள்ளனர். அதனால் தான் மற்றமாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு முற்போக்கு மற்றும் முதன்மை மாநிலமாக இயங்கி கொண்டிருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு துறையை சேர்ந்தவர்களுக்கும் ஒவ்வொரு பொறுப்பு இருக்கும். ஆனால், என்எஸ்எஸ் உள்ளிட்ட அமைப்புகளுக்கு விதி விலக்கு இல்லை. எல்லா துறையிலும் இவர்களின் பங்களிப்பு இருக்கும். மரம் நடுவதில் இருந்து, பேரிடர்மீட்புபணிவரை என்எஸ்எஸ் உள்ளிட்ட அமைப்புகள் தான் முதலில் நிற்பார்கள்.

தமிழ்நாட்டை போதையற்ற மாநிலமாக மாற்றுவது தான் முதலமைச்சரின் முதல் இலக்கு. போதைப்பொருள் ஒழிப்புக்காக மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறீர்கள், 75வது சுதந்திர தினம் கொண்டாட்டம், அரசியல் அமைப்பு தினம், யோகா தினம், தூய்மை இந்தியா திட்டம் ஆகிவற்றிலும் நீங்கள் பெருமளவில் பங்கேற்றுள்ளனர். என்எஸ்எஸ் உள்ளிட்ட அமைப்புகளின் பங்களிப்பு மிக அதிக அளவில் உள்ளது என தெரிவித்தார்.

இப்படி பல்வேறு சமூக நலப்பணியில் ஈடுபட்டு வரும் நீங்கள், விளையாட்டுத்துறை அமைச்சராக நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன் என்றார். கல்வி என்பது மிகவும் அவசியமான ஒன்று, கல்விதான் நம்மிடம் இருந்து பிரிக்க முடியாத அழிக்க முடியாத சொத்து. எனவே, நீங்கள் கல்வியிலும் முழு கவனம் செலுத்தவேண்டும். அதே நேரத்தில் உங்களுக்கு பிடித்தவிளையாட்டிலும் முழு கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

மேலும், தகவல் தொழில்நுட்பம் இன்றைக்கு வேகமாக வளர்ந்து வருகிறது. AI, CHAT GPT உள்ளிட்ட அறிவியல் வேகமாக வளர்ந்து வருகிறது. சமூக வலைதங்களான ட்விட்டர் (எக்ஸ் தளம்), பேஸ்புக், இன்ஸ்டாகிராம் என உள்ளிட்ட தளங்களில் இல்லாதயாரும்இல்லை, ஒரு விஷயத்தையே, ஒரு பதிவையோ, ஒரு புகைப்படத்தையோ பார்க்கும்போது பகுத்தறிவு கொண்டு சிந்தித்து இது உண்மைதானா என்று யோசிக்க வேண்டும். இதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் நமக்குசொல்லிஉள்ளார். இதைநீங்கள்கடைபிடிக்க வேண்டும்.

எந்த ஒரு செய்தியை பகிர்வதற்கு முன்பு உண்மைதானா என்று உறுதி செய்தபின் பகிர்ந்துகொள்ளுங்கள், அப்பா அம்மா தவிர வேறு யார் என்ன சொன்னாலும், உடனே நம்ப வேண்டாம், எதிர்த்து கேள்வி கேளுங்கள். ஒரு சிறிய வதந்திதான் மிகப்பெரிய பிரச்சனைகளை சமூகத்தில் உருவாக்குகிறது.இதனால் பொறுப்புணர்வுடன் சமூகவலைத்தளங்களை பயன்படுத்த வேண்டும் எனவும் மாநில நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.



தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில் அனைத்து மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களுடன் சிறுபான்மையினர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டு கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கடனுதவிகள் தொடர்பாக ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் சம்பத், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா, சிறுபான்மை நல இயக்குநர் ஆசியா மரியம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் ரீட்டா ஹரிஸ் தக்கர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர்(மு.கூ.பொ) அனில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் சம்பத், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்பு செயலாளர் ஹனீஷ் சாப்ரா, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நேற்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, சென்னையில் உள்ள ஒலிம்பியா தொழில் நுட்ப பூங்காவில் உள்ள ராஷ் (Roche) நிறுவனத்தின் Experience Centre தனை துவக்கி வைத்து, அந்நிறுவனத்தின் தொழில் நுட்பங்களைக் கேட்டறிந்தார்கள்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தட்டிப் பறிப்பவன்
வாழ்ந்ததில்லை..!
விட்டுக் கொடுப்பவன்
வீழ்ந்ததில்லை..!




# காவிரி விவகாரம் முற்றியதற்கு காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தான் – அண்ணாமலை பரபரப்பு குற்றச்சாட்டு

கோவை , ஆக. 25–

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை நேற்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

பாஜகமாநிலதலைவர் அண்ணாமலை கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது; ரஷியா அனுப்பிய விண்கலம் தோல்வியை தழுவிய போதும், இஸ்ரோ வெற்றிகரமாக சந்திரயான்–3ஐ ஏவியுள்ளது. இதில் தமிழர்களின் பங்கும் உள்ளது. உலக நாடுகளை இந்தியா திரும்பி பார்க்க வைத்திருக்கிறது. ஒரு திரைப்படத்தின் பட்ஜெட்டை விட, மிகக் குறைவான பட்ஜெட்டில் சந்திரயான் - 3 ஐ அனுப்பியிருக்கிறோம்.



கவர்னரை பொறுத்தவரை நீட் குறித்து பேசுவதில் எந்த தவறுமில்லை. நீட் தேர்வு விவகாரத்தில் தேவையில்லாமல் திமுகவினர் கவர்னரை வம்புக்கு இழுக்கின்றனர். தொட்டுப்பார், சீண்டிப்பார் என்றெல்லாம் கவர்னரை நோக்கி பேசுகிறார்கள். கவர்னரை சீண்டிப்பார்க்க வேண்டும் என்று சம்பந்தமில்லாமல் பேசுவது தவறு. கவர்னரை தமிழ்நாட்டில் போட்டி போட அழைப்பது போல, கவர்னர் பீகாருக்கு போட்டி போட அழைத்தால், திமுகவினர் இந்தி தெரியாமல் எங்கே போவார்கள். கவர்னரை எதிர்த்து கருப்புக் கொடி கட்டுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை.

டி என் பி எஸ் சி விவகாரத்தில் அந்த பொறுப்பில் இருப்பதற்கு சைலேந்திர பாபுவுக்கு தகுதி உள்ளதா என்று கவர்னர் பார்ப்பதாக நான் நினைக்கிறேன். இதில் நான் கருத்து சொல்வது சரியாக இருக்காது. காவிரி விவகாரத்தில் தற்போதைய பிரச்சினைக்கு காங்கிரசே காரணம். காவிரி விவகாரம் இந்த அளவு முற்றியதற்கு காரணம் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தான். இந்த விவகாரத்தில் தீர்க்க வேண்டிய சிக்கலை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இடியாப்ப சிக்கலாக்கியுள்ளார். இவ்வாறு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கோவை விமான நிலையத்தில் செய்தியாளகள் சந்திப்பில் கூறினார்.

# சாலை விபத்தில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதியுதவி – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 25–

சாலை விபத்தில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடந்த சாலைவிபத்தில், திருநெல்வேலி மாவட்டம், ஆரைகுளம், முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர்



(வயது 33) என்பவர், சந்திரயான் விண்கலம் தொடர்பான செய்திக்காக திருவனந்தபுரம் சென்று திருநெல்வேலி திரும்பும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இளம் வயதில் உயிரிழந்த தொலைகாட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு 5 லட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் 6 புதிய நாடுகள் இணைகின்றன

ஜோகன்னஸ்பர்க் , ஆக. 25–

பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் 6 புதிய நாடுகள் இணைவதாக தென் ஆப்பிரிக்க அதிபர் நேற்று அறிவித்துள்ளார்.

பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய 'பிரிக்ஸ்' மாநாடு செவ்வாய்கிழமை தென் ஆப்பிரிக்க நாட்டின் ஜோகன்னஸ்பர்க் நகரில் தொடங்கியது. இது 3 நாள் மாநாடு ஆகும். கொரோனா காரணமாக, 3 ஆண்டுகளுக்கு பிறகு நேரடி நிகழ்வாக மாநாடு நடக்கிறது.

தென் ஆப்பிரிக்க அதிபர் சிறில் ரமாபோசா அழைப்பின் பேரில், மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி செவ்வாய்கிழமை தென் ஆப்பிரிக்கா சென்றார். அவரை அந்நாட்டு துணை அதிபர் வரவேற்றார். பிரதமர் மோடிக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் 6 புதிய நாடுகள் இணைய உள்ளதாக தென் ஆப்பிரிக்க அதிபர் சிறில் ரமாபோசா அறிவித்துள்ளார். அர்ஜெண்டினா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து, எத்தியோப்பியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளை பிரிக்ஸ் அமைப்பில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அர்ஜெண்டினா, எகிப்து, எதோப்பியா, ஈரான், சவுதி மற்றும் ஐக்கிய அமீரகம் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினராக ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. 2024 ஜனவரி முதல் அமலுக்கு வரும் என்று கூறப்படுகிறது. இதனிடையே சந்திரயான் 3 வெற்றிக்கு பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்ற உலக நாட்டு தலைவர்கள் பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# ரஷ்யாவில் அதிபர் புதினுக்கு எதிராக திடீர் கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் குழு தலைவர் பிரிகோஜின் விமான விபத்தில் பலி?

மாஸ்கோ , ஆக. 25–

ரஷ்யாவில் அதிபர் புடினுக்கு எதிராக திடீர் கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் குழு தலைவர் பிகோஜின் நேற்று விமான விபத்தில் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் இருந்து செண்ட் பீட்டர்ஸ்பக் நகருக்கு சென்ற ஜெட் விமானம் ஒன்று திடீரென வெடித்து சிதறி விபத்துக்குள்ளானது. இதில் ஜெட் விமானத்தில் பயணம் செய்த ஏழு பயணிகள் மற்றும் மூன்று பணியாளர்கள் உயிரிழந்தனர்.

ஜெட் விமானத்தில் பயணம் செய்தவர்கள் பெயர் பட்டியலில் அதிபர் புதினுக்கு எதிராக திடீர் கிளர்ச்சியில் ஈடுபட்ட



பிரிகோஜின் பெயரும் உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் உறுதிப்படுத்தி உள்ளன. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா ராணுவத்துடன் இணைந்து சண்டையிட வாக்னர் குழு பல்வேறு நகரங்களை ரஷ்யா கைப்பற்ற உதவிகரமாக இருந்தது ஆனால் திடீரென ரஷ்யா ராணுவம் தங்கள் வேர்களை கொள்வதாக கூறி வாக்னர் குழு கிளர்ச்சியில் ஈடுபட்டது.

ரஷ்யாவின் நகரங்களை ஆக்கிரமித்த வாக்னர் குழு தலைநகர் மாஸ்கோவையும் முற்றுகையிட முயன்றது. ஆனால் பெலாரசு அரசு தலையிட்டு அமைதி பேச்சுவார்த்தை நடத்தியதை எதிர்த்து வாக்னர் குழு பின்வாங்கியது. அந்த குழுவின் தலைவரும் பெலாரஸ் நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டார். இந்நிலையில் ஜெட் விமான விபத்தில் பிரிகோஜின் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. விமானத்தில் பயணம் செய்தவர்கள் பட்டியலில் பிரிகோஜின் பெயர் உள்ளது என்றும் ஆனால் விபத்தில் பலியானவர்களில் பிரிகோஜின் உடல் அடையாளம் காணப்படவில்லை என்றும் அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

# புகுஷிமா அணுஉலையின் கதிரியக்க கழிவு நீரை கடலில் திறந்து விட்டது ஜப்பான்.!

புகுஷிமா , ஆக. 25–

புகுஷிமா அணுஉலையின் கதிரியக்க கழிவு நீர் பசிபிக் கடலில் திறந்து விடப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுஉலை நிலையத்தில் நிலநடுக்கம் காரணமாக அணுக்கசிவு ஏற்பட்டது. இதனை கட்டுப்படுத்த கடல் நீர் மற்றும் போரிக் அமில ரசாயனத்தை ஜப்பான் பயன்படுத்தியது. அணுக்கசிவை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட கடலில் நீர், கதிரியக்க கழிவு நீராக மாறியது. அந்த நீரை சுத்திகரித்து பசிபிக் கடலில் விட ஜப்பான் முயற்சி மேற்கொண்டது.

இதற்காக அவற்றை சுத்திகரித்து பேரல்களில் சேமித்து வைக்கப்பட்டது. ஆனால், மீனவர்கள் மற்றும் சீனா தரப்பில் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனினும், நீரை வெளியேற்றுவதற்கான அனைத்து அனுமதிகளையும் ஜப்பான் பெற்றது. இதனால் நேற்று முதல் சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீர் வெளியேற்றப்படும் என கடந்த வாரம் ஜப்பான் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று முதல் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீர் பசிபிக் கடலில் திறந்து விடப்பட்டுள்ளது. அணுஉலை நிலையத்தின் கட்டுப்பாடு அறையில் இருந்து லைவ் வீடியோ மூலம் தண்ணீர் திறந்து விடப்படும் காட்சி வெளியானது.

# பள்ளி, கல்லூரிகளில் சாதி மோதல்கள்; ஒரு நபர் விசாரணைக் குழு அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியீடு

சென்னை , ஆக. 25–

ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு நபர் விசாரணைக் குழு அமைத்து நேற்று பள்ளிக்கல்வித்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அரசுப் பள்ளி மாணவனை, சக மாணவர்கள் சிலர் வீடு புகுந்து அரிவாளால் வெட்டிய சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் மாணவனின் தங்கைக்கும் படுகாயம் ஏற்பட்ட நிலையில், இருவரும் நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது போன்ற சம்பவங்கள் பள்ளி, கல்லூரிகளில் நடைபெறாமல் இருப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, தேவையான பரிந்துரைகளைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. அதன்படி தற்போது இதற்கான அரசாணையை பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளர் காகர்லா உஷா வெளியிட்டுள்ளார்.

அந்த அரசாணையில், ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு 6 மாதங்களுக்குள் இது தொடர்பான பரிந்துரை அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கல்வியாளர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்டோரிடம் கருத்துக்களைப் பெற்று அறிக்கையில் சமர்ப்பிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும் சாதி, இன மோதல் தொடர்பான வழக்குகளில் கைதாகி விடுதலையான சிறுவர்களிடம் கலந்துரையாடி மோதலுக்கான காரணங்களை கேட்டுப் பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அலுவலகம் சென்னை மயிலாப்பூரில் இயங்கும் என்றும், வருங்காலத்தில் கல்வி நிலையங்களில் இணக்கமான சூழல் நிலவ தேவையானவற்றை அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு உடனடியாக இது தொடர்பான விசாரணையை தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குவைத் நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டு தவிக்கும் 20 தமிழர்களை மீட்க வேண்டும்: பாமக ராமதாஸ் அறிக்கை

சென்னை , ஆக. 25–

குவைத் நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டு அந்த நாட்டில் தவித்து வரும் 20 தமிழர்களையும் மீட்க வேண்டும் என பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது, குவைத் நாட்டில் தூய்மைப் பணிக்காக அழைத்துச் செல்லப்பட்ட அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள், அவர்கள் பணி செய்த நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டு, சொந்த ஊர் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர்.

தாயகம் திரும்ப தங்களுக்கு உதவி செய்யும்படி தூதரகத்தில் முறையீடு செய்தும் அவர்களுக்கு தூதரகம் எந்த உதவியும் செய்யாதது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 20 இளைஞர்கள் கடந்த ஓராண்டுக்கு முன் சென்னையில் உள்ள ஆள்தேர்வு நிறுவனத்தின் மூலமாக குவைத் நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்தில் தூய்மைப் பணியாளர்களாக பணிக்கு சென்றனர்.

அதற்காக சென்னையில் உள்ள ஆள்தேர்வு நிறுவனத்திற்கு ரூ.1.05 லட்சம் முதல் ரூ.1.50 லட்சம் வரை கட்டணம் செலுத்தியுள்ளனர். குவைத் நிறுவனத்தில் அவர்களுக்கு மாத ஊதியம் ரூ.20,000 (75 குவைத் தினார்) வீதம் இரு ஆண்டுகளுக்கு வேலை வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஓராண்டு பணி முடிந்த நிலையில், வேலைவாய்ப்பை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க வேண்டுமானால் ரூ.1.25 லட்சம் கூடுதலாக செலுத்த வேண்டும் என்று குவைத் நிறுவனம் கட்டாயப்படுத்தியிருக்கிறது.

குவைத்துக்கு வேலைக்கு சென்ற 20 இளைஞர்களும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். கடந்த ஓராண்டாக பணி செய்து அவர்கள் ஈட்டிய ஊதியத்தைக் கொண்டு, குவைத் செல்வதற்காக வாங்கிய கடனையும், அதற்கான வட்டியையுமே கட்ட முடியாத நிலையில், அவர்களால் குவைத் நிறுவனம் கேட்ட பணத்தைத் தர முடியவில்லை. அதனால், அவர்களை வேலையை விட்டு நீக்கிய நிறுவனம், அவர்களின் கடவுச்சீட்டை பறித்து வைத்துக் கொண்டது.

அவர்களின் உடமைகள் அனைத்தையும் தூக்கி வீசிய நிறுவன அதிகாரிகள், அவர்கள் தங்குவதற்காக



அளிக்கப்பட்டிருந்த இடத்தையும் மூடி விட்டனர். அதனால், 20 இளைஞர்களும் கடந்த ஒரு மாதமாக தங்குவதற்கு இடம் இல்லாமலும், உண்ண உணவு கிடைக்காமலும் குவைத்தில் வாடுகின்றனர். அவர்களிடம் கடவுச்சீட்டும், பயணச்சீட்டுக்கு பணமும் இல்லாததால், சொந்த ஊருக்கும் திரும்ப முடியாமல் குவைத்தில் தவித்து வருகின்றனர்.

குவைத் நிறுவனம் தங்களை ஏமாற்றியது குறித்து குவைத்தில் உள்ள இந்தியத் தூதரகம், தொழிலாளர் நலத்துறை அலுவலகம், காவல்நிலையம் ஆகியவற்றில் 20 தமிழ் இளைஞர்களும் புகார் செய்துள்ளனர். அவர்களின் புகாரை ஆய்வு செய்த உள்ளூர் காவல்துறையினர், சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகளை வரவழைத்து விசாரித்துள்ளனர்.

அதனடிப்படையில், சம்பந்தப்பட்ட 20 தொழிலாளர்களும் தங்கியிருக்க இடமும், உணவும் அளிக்க வேண்டும்; அவர்களின் கடவுச்சீட்டை ஒப்படைத்து, பயணச்சீட்டு பெற்றுக் கொடுத்து அவர்கள் தாயகம் திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளனர். ஆனால், காவல்துறையின் ஆணையை குவைத் நிறுவனம் மதிக்காததால், 20 தமிழ் இளைஞர்களின் துயரம் தொடர்கிறது. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் அவர்கள் தவிக்கின்றனர்.

குவைத் நிறுவனத்தின் துரோகம் மற்றும் மோசடி குறித்து அங்குள்ள இந்திய தூதரகத்திலும் கடந்த ஜூலை 23 ஆம் நாள் அவர்கள் புகார் செய்துள்ளனர். ஆனால், அதன்பின் ஒரு மாதம் ஆகியும் இது வரை எந்த நடவடிக்கையையும் இந்தியத் தூதரகம் மேற்கொள்ளவில்லை. தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வேலை இல்லை என்பதற்காகத் தான் குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு பணிக்கு செல்கின்றனர்.

மாதம் ரூ.20000 ஊதியம் கிடைக்கும் வேலைக்கு தங்களின் குடும்பத்தினரை பிரிந்து பல்லாயிரம் கி.மீ தொலைவுக்கு அப்பால் பணிக்கு செல்கிறார்கள் என்றால், அவர்களின் பொருளாதார நிலையை புரிந்து கொள்ள முடியும். கிட்டத்தட்ட ரூ.2 லட்சம் செலவழித்து குவைத்துக்கு சென்ற அவர்கள் ஓராண்டில் ஈட்டிய மொத்த ஊதியமே ரூ.2,40,000 மட்டும் தான். அவர்களிடம் கூடுதலாக ஓராண்டு பணி வழங்க ரூ.1.25 லட்சம் கேட்பது எந்த வகையிலும் நியாயமல்ல.

அப்பாவி தமிழ் தொழிலாளர்களிடம் நிகழ்த்தப்படும் இந்த உழைப்புச் சுரண்டலை எந்த நாடும் அனுமதிக்கக் கூடாது. குவைத் நிறுவனத்தால் ஏமாற்றப்பட்ட 20 தமிழ் இளைஞர்களும் எதிர்காலம் என்னவாகும் என்பதே தெரியாமலும், அடுத்த வேலை உணவுக்கு வழியில்லாமலும் தவிக்கின்றனர். அவர்களின் துயரம் தொடர்கதையாகக் கூடாது. குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் வழியாக சம்பந்தப்பட்ட குவைத் நிறுவனத்திடமிருந்து தொழிலாளர்களின் கடவுச்சீட்டு, ஊதிய நிலுவை ஆகியவற்றை பெற்றுக் கொடுத்து, 20 தமிழர்களையும் தாயகத்திற்கு அழைத்து வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பிறந்தநாளை முன்னிட்டு இன்று தொண்டர்களை சந்திக்க உள்ளார் தேமுதிக தலைவர் விஜயகாந்த்

சென்னை , ஆக. 25–

தேமுதிக தலைவர் விஜயகாந்த் இன்று தொண்டர்களை சந்திக்க உள்ளார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2005ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்ட பிறகு 2006 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் எனது பிறந்தநாளை "வறுமை ஒழிப்பு தினமாக" கடைப்பிடித்து வருகிறேன். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிர்வாகிகளும், தொண்டர்களும் என் வழியை பின்பற்றி அவர்களால் முடிந்த அளவிற்கு மக்களுக்கான நல உதவிகளை "இயன்றதைச் செய்வோம், இல்லாதவர்க்கே" என்ற கொள்கை முழக்கத்தோடு தொடர்ந்து, ஒவ்வோரு ஆண்டும் செய்து வருகிறார்கள்.

இதன் மூலம்



தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெற்று, அவர்களின் வறுமையை ஒழிக்கும் முயற்சியில் தே.மு.தி.க. தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. வறுமை ஒழிப்பு என்பது மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்பதே எனது குறிக்கோள். தமிழக மக்கள் மனதில் நாம் நீங்கா இடம்பிடித்துள்ளோம். என் மீது அன்புகொண்ட தமிழக மக்களுக்கும், என் தாய்மார்களுக்கும், தேமுதிக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் என்றென்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். அதே நேரத்தில் தமிழக மக்கள் தங்கள் நல் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய உடல்நலம் குறித்த வந்திகளை யாரும் நம்பவேண்டாம். நான் நலமுடன் இருக்கிறேன். கோயம்பேட்டில் உள்ள தலைமை கழகத்தில் எனது பிறந்தநாளை முன்னிட்டு இன்று காலை 10 மணிக்கு கழக நிர்வாகிகளையும், கழக தொண்டர்களையும் நேரில் சந்திக்கவுள்ளேன். என்னை சந்திக்க வரும் கழக தொண்டர்கள் யாரும் பொக்கே, சால்வை, மாலை, போன்ற அன்பளிப்புகளை தவிர்க்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உணவுக் கழகம், உணவு சேமிப்பு கிடங்கு செயல்பாடுகள் குறித்து மாணவர்கள் ஆய்வு



காரைக்கால், ஆக,25

உணவுக் கழகச் சட்டம், 1954ன் கீழ் இந்திய உணவுக் கழகம் உருவாக்கப்பட்டது. அதன் நோக்கங்களின் முதன்மையானது, விவசாயிககளின் நலன்களைப் பாதுகாப்பது மற்றும் குறைந்த பட்ச ஆதரவு விலை பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

பொது விநியோக முறையில் நாடு முழுவதும் உணவு தானியங்களை வினியோகித்தல் தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது. தொடக்கத்தில் இருந்தே நெருக்கடியான காலங்களில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்குவதிலும் உணவு தட்டுப்பாடு இல்லாத நாடாக மாற்றுவதிலும் இந்தியாவின் வெற்றியில் எப்.சி.ஐ-யின் பங்கு முதன்மையானது.

அதற்கு எடுத்துக்காட்டாக கொரோனா பெருந்தொற்றின் போது ஏழைகள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை போக்க பிரதான் மந்திரி கரிப் கல்யாணி அன்ன போஜனா (PM - GKAY) திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு மாதத்திற்கு 5 கிலோ என்ற அளவில் உணவு தானியங்கள் வழங்கப்பட்டது. கோவிட் முழுமையாக முடிவடையாததால் பயனாளிகளுக்கு ஆதரவளிப்பதற்காக மத்திய அரசு 1 ஜனவரி 2023 முதல் என் எப்.எஸ்.ஏதிட்டத்தின் கீழ் இந்தயா முழுவதும் உணவு தானியங்களை இலவசமாக வழங்கி வருகிறது.

காரைக்காலில் உள்ள எப்.சி.ஐ-க்கு சொந்தமான உணவு தானிய கிடங்கில் இருந்து காரைக்கால் மாவட்டம் மட்டுமல்லாது நாகை, மயிலாடுதுறை, மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில் பொது விநியோக திட்டம் மற்றும் பிற நலத்திட்டங்களின் கீழ் உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

உணவுப் பாதுகாப்பு மட்டுமல்லாது ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மத்திய அரசானது அரிசியுடன் செறிவூட்டப்பட்ட அரிசியும் கலந்து ஏப்ரல் 2022-ல் இருந்து பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கி ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சனையை போக்கி வருகிறது. அவ்வாறு செறிவூட்டப்பட்ட அரிசியில் இரும்புச்சத்து, வைட்டமின் பி.12 மற்றும் ஃபோலிக் அமிலத்தில் நுண்ணுட்டச்சத்துகள் அடங்கி உள்ளது.

இவ்வாறுஇந்தியஉணவுக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து இளைஞர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் காரைக்காலில் உள்ள அன்னை தெரசா அரசு பெண்கள்மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் சுமார் 100-க்கும் மேற்பட்ட அப்பள்ளி மாணவிகள் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி தலைமையில் உணவு கழகத்திற்கு சென்று உணவுக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு கழகத்தின் மேலாளர்கள் முரளி மற்றும் அபினேஷ் ஆகியோரும் மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

# மதுராந்தகத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்



சென்னை , ஆக.25-

சென்னை ஷோபதம் சலானி பவுண்டேசன் சென்னை அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் பி. சி பவுண்டேசன் ஆகியவற்றின் சார்பாக மதுராந்தகம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் நடுநிலைப்பள்ளியின் வகுப்பறை கட்டிடங்களை ரூபாய் 15 லட்சம் மதிப்பிலான புனரமைப்பு பணி செய்தல் பள்ளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சென்னை ஷோபதம் சலானி பவுண்டேஷன் நிர்வாகிகள் மதுராந்தகம் சுற்றுவட்டார பகுதிகளில் பல்வேறுநலத்திட்டபணிகளை செய்து வருகின்றனர் இந்த நிலையில் மதுராந்தகம் இந்து கார்னேஷன் நடுநிலைப்பள்ளி மற்றும் இந்து மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆகியவற்றை சேர்ந்த 1700 பேருக்கு சென்னை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை டாக்டர் முருகன் தலைமையில் 30க்கும் மேற்பட்ட மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு இலவச கண் மருத்துவ பரிசோதனை செய்தனர்.

தொடர்ந்து மதுராந்தகம் இந்து கார்நேஷன் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஏற்கனவே உள்ள வகுப்பறை கட்டிடங்களை பழுதடைந்த நிலையில் உள்ளதை அறிந்து சோபதம் ஷாலினி பவுண்டேஷன் நிர்வாகிகள் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பள்ளி கட்டிடங்களை பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சௌபாதம் சாலம் அஜித் பூஜா ஷாலினி மம்தா அபிலாஷ் முத்ரா ஸ்வப்னாபவான் கோச்சார் நகை வியாபாரிகள் சங்க நிர்வாகி மதுராந்தகம் ஜெயிந்தலால் இந்து கருணாநிதி நடுநிலைப்பள்ளி செயலர் எஸ். சேகர் பள்ளி முதல்வர் அமுதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி அரசு நலவழித்துறை–காரைக்கால் கொசு ஒழிப்பு சார்பில் புகைமருந்து அடிக்கும் பணி



காரைக்கால், ஆக,25

காரைக்கால் நெடுங்காடு பகுதியில்நலவழித்துறையுடன் இணைந்து நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகம் குடியிருப்பு பகுதியில் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக் கிழமையன்றுடெங்குகாய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை ஆலோசனைக்கூட்டம்மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், தலைமையில் நடைப்பெற்றது.

அக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் டெங்கு காய்ச்சல் பரவாமலிருக்க மாவட்டம் முழுவதும் கொசு ஒழிப்பு பணியை நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகத்தினர் நலவழித்துறையுடன் இணைந்து தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்அதன்படி புதன் கிழமையன்று நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர்.சிவராஜ்குமார் வழிகாட்டுதல்படி நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்களுடன் இணைந்து நலவழித்துறையின் களப்பணியாளர்கள் நெடுங்காடு குடியிருப்பு பகுதிகளில் காலையில் கொசு புழுக்களை அழிக்கும் மருந்து தெளிப்பானகளை பயண்படுத்தி தேங்கிய நீர்களில் உள்ள கொசு புழுக்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர் மாலையில் முதிர்ந்த கொசுக்களை ஒழிப்பதற்காக புகை மருந்து அடித்தனர்.

இப்பணிகளை நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன் , நலவழித்துறையின் தேசிய கொசு மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்தடுப்பு திட்டத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் துவக்கிவைத்தனர் இப்பணியில் கொம்யூன் பஞ்சாயத்து களப்பணியாளர்களும் நலவழித்துறை களப்பணியாளர்களும் இணைந்து கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டனர்.

கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் கூறியதாவது வாரம் ஒரு முறை நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து பகுதிகளில் நலவழித்துறையுடன் இணைந்து கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுவோம் என்று தெரிவித்தார். பொதுமக்கள் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் குப்பைகளை போடாமலும், தண்ணீர் தேங்காமலும் வைத்துக் கொண்டு கொசு ஒழிப்பில் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### சென்னை வண்ணாரப் பேட்டையில் அரசு உதவி பெறும் கல்லூரியான

# சர் பிட்டி தியாகராயர் கல்லூரியில் தேசிய மாணவர் படை சார்பில் ரத்ததான முகாம்



சென்னை , ஆக.25-

சென்னை வண்ணாரப் பேட்டையில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரியான சர் பிட்டி தியாகராயர் கல்லூரியில் தேசிய மாணவர் படை சார்பில் ரத்ததான முகாம் நடைபெற்றது

தியாகராய கல்லூரியில் நடைபெற்ற ரத்ததான முகாமை கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலர் சிரஞ்சீவி மட்சா, கல்லூரி முதல்வர் செந்தில்குமார் ,தேசிய மாணவர் படை அதிகாரி மோகன்ராஜ் தொடங்கி வைத்தனர்.

கல்லூரியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டமாணவமாணவர்கள் படிக்கும் நிலையில் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்காக ஆண்டுதோறும் ரத்ததான முகாம் நடைபெறுகிறது.

மாணவ மாணவியர்கள் காலை முதலே ஆர்வமுடன் ரத்த தானமாக அளித்தனர்.

ராயபுரம் அரசு ஆர் எஸ் ஆர் எம் மகப்பேறு மருத்துவமனை மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரத்த வங்கியில் இருந்து மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு ரத்ததான முகாம் நடைபெற்றது.

ரத்ததான முகாமை அடுத்து அரசு மருத்துவமனைகளுக்கு 500 யூனிட்டுக்கும் மிகாமல் ரத்தம் கொடுப்பதற்கு இலக்கை நிர்ணயித்து என். சி சி சார்பில் ரத்ததான முகாம் நடைபெற்றது

# மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை நடத்தும் நூல் வெளியீட்டு விழா



மதுரை, ஆக.25-

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவு நடத்தும் கி.ரா.வின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கி.ரா.வின் படைப்புலகம் என்னும் பன்னாட்டு கருத்தரங்கில் பட்ட ஆய்வாளர்கள், தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் மாணவர்கள் என பலரும் தங்கள் கட்டுரைகள் எழுதி அவற்றை நூலாக்கம் செய்து நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி செயலாளர் மூ. விஜயராகவன் ஐயா தலைமை தாங்கினார், கல்லூரியின் தலைவர் சு. இராஜகோபால், பொருளாளர் ஆ. ஆழ்வார் சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர், இயக்குனர் ச.பிரபு வாழ்த்துரை வழங்கினர், விழாவில்துறைத்தலைவர் தி. பரிமளா அம்மா வரவேற்புரை நல்க இரா. முத்துராஜா நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்வினை பூ. ஜோதிமுருகன்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார், இப்பன்னாட்டுகருத்தரங்க நூலினைகல்லூரிமுதல்வர் அ. ராமசுப்பையா நூல் வெளியீட்டு சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சோ. தர்மன் ஐயா நூலை பெற்று சிறப்புரையாற்றினார். இவ்விழாவினைகருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் கூ. கருப்பசாமி, பூ.ஜோதி முருகன்,இரா.முத்துராஜா ஆகியோர் விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர்.

# சென்னை தண்டையார்பேட்டை மாநகராட்சி மாதாந்திர மண்டல குழு கூட்டத்தில் 64 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது





சென்னை, ஆக,25

சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்தில் மாதாந்திர மண்டல குழு கூட்டம் நேற்று காலை தண்டையார்பேட்டை திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தலைமை வகித்தார், மண்டல அதிகாரி ராதாகிருஷ்ணன் முன்னிலையில் வைத்தார் இதில் திமுக, காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது தங்களுடையவார்டுகளில் உள்ள குறைகள் குறித்தும் அதனை சரி செய்ய வலியுறுத்தி மாமன்ற உறுப்பினர்கள் பேசினார், அதனை சரிசெய்வதாக மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் ஆறு கோடியில்64தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது அதில்முக்கியதீர்மானமாக வியாசர்பாடி சி கல்யாணபுரத்தில் பல்நோக்கு மையம் 25 லட்ச ரூபாய் செலவில் தொடங்குவதும் தண்டையார்பேட்டை சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கூட்ட அரங்கம் 75 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது கொடுங்கையூர் சிட்கோ நகரில் இருந்து மீனம்பாள் சாலை வரை மழை நீர் கால்வாய் 29 லட்ச ரூபாய் செலவில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

அதேபோல் டிவிகே இரண்டாவது தெரு கிரி தெரு ஆகிய பகுதிகளில் 29 லட்ச ரூபாய் செலவில் மழைநீர் கால்வாய் பணிகள் தொடங்கப்பட உள்ளது கொடுங்கையூர் ஆர் ஆர் நகரில் 25 லட்ச ரூபாய் செலவில் பல்நோக்கு மையம் தொடங்கப்பட உள்ளது மேலும் பல்வேறு திட்டங்கள் நடைபெற உள்ளதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலம் தொடங்குவதற்குள் மழை நீர் கால்வாய் பணிகளை முடித்து சாலைகளை விரைவில் அமைத்திட கோரி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாநகராட்சி செயற்பொறியாளர்கள் சுகாதாரத்துறை அதிகாரிகள் குடிநீர்வாரிய அதிகாரிகள் மின்வாரிய அதிகாரிகள் வருவாய் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை உடனடியாகநிறைவேற்றி தருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்

# மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்களின் செங்கல்பட்டு மாவட்ட தலைவர், செயலாளர் தேர்வு



செங்கல்பட்டு, ஆக.25-

செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி தனியார் மண்டபத்தில் 31ஆம் தேதி 11 அம்ச கோரிக்கைகளைவலியுறுத்தி சென்னையில் நடைபெற உள்ள தமிழ்நாடு ஊராட்சி மன்ற தலைவர்களின் உரிமை மீட்பு பேரணி சம்பந்தமாகசெங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள்ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் இராஜன் கலந்துகொண்டு பல்வேறுஆலோசனைகளை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் மதுராந்தகம் சித்தாமூர் அச்சரப்பாக்கம் லத்தூர் திருக்கழுக்குன்றம் காட்டாங்குளத்தூர் ஆகிய ஒன்றியங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

இதில் ஊராட்சி மன்ற தலைவர்களின் செங்கல்பட்டு மாவட்ட தலைவராக பூதூர் சுரேஷ், மாவட்ட செயலாளராக நிர்மல் குமார் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர் அவர்களுக்கு கூட்டமைப்பின்தலைவர்கள் சால்வே அணிவித்துமாலை அனைத்தும்வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# பாஸ்போர்ட் கோரி நளினி தொடர்ந்த வழக்கில் 4 வாரங்களில் முடிவெடுக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை , ஆக.25-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, முன்விடுதலையான நளினியின் பாஸ்போர்ட் விண்ணப்பத்தின் மீது 4 வாரங்களில் முடிவெடுக்க மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில், "கடந்த 32 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலையான நிலையில், லண்டனில் வசிக்கும் என் மகளுடன் இருக்க விரும்புகிறேன். அங்கு செல்வதற்காக பாஸ்போர்ட் கோரி ஆன்லைன் மூலமாக ஜூன் 12-ம் தேதி விண்ணப்பித்தேன். ஜூன் 14-ம் தேதி சாலிகிராமத்தில் உள்ள பாஸ்போர்ட் சேவை மையத்தில் நேரில் சென்று ஆவணங்களை சமர்ப்பித்தேன். காவல் துறை சரிபார்ப்புக்கு பிறகு பாஸ்போர்ட் வழங்கபடும் என பாஸ்போர்ட் அலுவலக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

திருவான்மியூரில் தற்போது வசிக்கும் வீட்டுக்கு ஆகஸ்ட் 1-ம் தேதி வந்த திருவான்மியூர் காவல் துறையினர் விசாரணை நடத்தி சென்றனர். ஆனால், தற்போது வரை பாஸ்போர்ட் வழங்கப்படவில்லை. எனவே காவல் துறை சரிபார்த்த விவரங்களை பாஸ்போர்ட் அதிகாரிக்கு அனுப்பி வைக்கவும், எனக்கு பாஸ்போர்ட் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது காவல் துறை தரப்பில், "விசாரணை நிறைவடைந்து விட்டது. விவரங்களை சரிபார்த்த அறிக்கை பாஸ்போர்ட் அதிகாரியிடம் ஆகஸ்ட் 11-ம் தேதி சமர்ப்பித்துவிட்டது" எனத் தெரிவிக்கபட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, நளினியின் பாஸ்போர்ட் விண்ணப்பத்தின் மீது 4 வாரங்களில் முடிவெடுக்க மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

### திருநள்ளாறு நளன்குளம் பகுதியில் சாலையோர வியாபாரிகளை

# அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை கோவில் நிர்வாகம் கைவிட வேண்டும் முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன் வேண்டுகோள்



திருநள்ளார், ஆக 25

காரைக்கால் மாவட்டத்தில் புகழ்பெற்ற திருநள்ளாறு சனீஸ்வர பகவான் ஆலயம் அமைந்துள்ளது இக்கோவிலுக்கு சனிக்கிழமைகளில் ஏராளமான பக்தர்கள் வந்து செல்வது வழக்கம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் முன்னதாக நளன்குளத்தில் நீராடி பின்னர் சனீஸ்வர பகவானை தரிசனம் செய்வது வழக்கம் இந்நிலையில் நலங்குளம் செல்லும் வழியில் சாலை ஓரங்களில் பூஜை பொருட்கள் மற்றும் சிறு உணவு விடுதிகள் உள்ளிட்டசிறுகடைகளை அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் வைத்து வியாபாரம் செய்து தங்களது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர்.

இந்நிலையில் கோயில் நிர்வாகம் நளன்குளம் பகுதியில் உள்ள கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக சாலையோர வியாபாரிகள் முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணனை சந்தித்து கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை அடுத்து நளன்குளம் பகுதிக்கு நேரில் வந்த முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன் அப்பகுதி சாலையோர வியாபாரிகளிடம் அவர்களின் குறைகளை கேட்டறிந்தார் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் தங்களின் வாழ்வாதத்திற்காகதினம் தினம் சிறு கடைகளை கொண்டு வியாபாரம் நடத்தி அதில் வரும் வருமானத்தை கொண்டு வாழும் நளன்குளம் பகுதி சாலையோர வியாபாரிகளை அப்புறப்படுத்திவிட்டு வரும் எந்தவித வளர்ச்சியும் நியாயமான வளர்ச்சி இல்லை எனவும் அவர் கூறினார்.

தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் கோயில் நிர்வாகம் திருநள்ளாறு நளன்குளம் பகுதியில் சாலையோர கடைகள் வைத்திருக்கும் இவர்களுக்கு எந்த வித இடையூறும் இல்லாமல் எந்தநடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கோடநாடு வழக்கில் எடப்பாடி பழனிசாமியை விசாரிக்க வேண்டும் கார் ஓட்டுநர் கனகராஜின் சகோதரர் தனபால் வலியுறுத்தல்





சேலம் , ஆக.25-

கோடநாடு வழக்கில் பழனிசாமியை விசாரிக்க வேண்டும் என கார் ஓட்டுநர் கனகராஜின் சகோதரர் தனபால் வலியுறுத்தியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று பேட்டியளித்த தனபால், தனது சகோதரர் கனகராஜ் கோடநாடு பங்களாவில் இருந்து 5 பெரிய பைகளை எடுத்துவந்து சிலரிடம் கொடுத்தார். கோடநாட்டில் கொள்ளை நடந்த நேரத்தில் தனது தம்பி கனகராஜை பெருந்துறையில் தான் சந்தித்தேன். தன்னை சந்தித்தபோது கனகராஜ் 5 பெரிய பைகளை வைத்திருந்தார். எடப்பாடி பழனிசாமி கூறியதன் பெயரில்தான் 5 பைகளை எடுத்துவந்ததாக கனகராஜ் என்னிடம் தெரிவித்தார். 3 பெரிய பைகளை சங்ககிரியிலும் 2 பெரிய பைகளை சேலத்திலும் முக்கிய நபர்களிடம் கொடுக்க இருப்பதாக கனகராஜ் தெரிவித்தார்.

கோடநாடு பங்களாவில் இருந்து ஏராளமான ஆவணங்களை கனகராஜ் பையில் எடுத்து வந்தார். இதனால் தனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று கனகராஜ் தெரிவித்த நிலையில்தான் ஆத்தூரில் விபத்தில் உயிரிழந்தார் என்று தனபால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# விக்ரம் லேண்டரில் இருந்து பிரிந்து வெற்றிகரமாக வெளியே வந்தது பிரக்யான் ரோவர்

## இஸ்ரோ அதிகாரப்பூர்வ தகவல்

பெங்களூரு, ஆக. 25:

விக்ரம் லேண்டரில் இருந்து பிரிந்து வெற்றிகரமாகபிரக்யான் ரோவர் வெளியே வந்தது என இஸ்ரோ அறிவித்துள்ளது.

நிலவில் தனிமங்களையும், தாதுக்களையும் கண்டறியும் வகையில் ரோவர் ஆய்வு நடத்த உள்ளது.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்திரயான் - 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கப்பட்டது. இதன் மூலம் இந்தியா வரலாற்று சாதனை படைத்துள்ளது. நிலவின் தென் துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக கடந்த ஜூலை 14ம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிக்கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து சந்திரயான் - 3 விண்கலம் எல்எம்வி3, எம்4 ராக்கெட் மூலம்



விண்ணில் ஏவப்பட்டது.

லேண்டர் அனுப்பும் தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ந்து வந்தனர். லேண்டரை தரையிறக்கும் நிகழ்வுக்காக வழிமுறைகள் ஏற்கெனவே பதிவேற்றப்பட்டது. இந்த வழிமுறைகளை ஆரம்பித்து வைக்கும் பணி தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சரியாக 5.44 மணிக்கு விக்ரம் லேண்டர் தரையிறக்கும் பணி தொடங்கியது. லேண்டர் நிலவில் இருந்து 30கி.மீ உயரத்தில் இருந்தபோது தரையிறக்கும் பணிகள் தொடங்கப்பட்டது. இதையடுத்து சரியாக 6.03 மணிக்கு நிலவில் சந்திரயான் விண்கலத்தின் விக்ரம் லேண்டர் பத்திரமாக தரையிறங்கியது.

இந்த வரலாற்று சாதனை வெற்றிக்கு பிரதமர் மோடி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். மேலும் உலகெங்கும் உள்ள அனைத்து இந்தியர்களும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் விக்ரம் லேண்டரில் இருந்து பிரிந்து வெற்றிகரமாக பிரக்யான் ரோவர் வெளியே வந்தது என இஸ்ரோ அறிவித்துள்ளது. நிலவில் தனிமங்களையும், தாதுக்களையும் கண்டறியும் வகையில் ரோவர் ஆய்வு நடத்த உள்ளது என்றும் இஸ்ரோ அறிவித்துள்ளது.



நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த 14-ஆம் தேதி எல்.வி.எம் ராக்கெட் மூலம் விண்ணில் பாய்ந்த சந்திரயான் -3 வெண்கலம் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கப்பட்டுள்ளது. சந்திராயன்-3 விண்கலத்தின்திட்ட இயக்குனராக தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி வீர முத்துவேல் பணியாற்றி இருப்பது மகிழ்ச்சியை தரும்விதத்தில் நமது பாரதம் வெற்றியை கொண்டாடும் விதமாக கடையநல்லூர் சொக்கம்பட்டியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்ட இளைஞர் அணித் தலைவர் எஸ். விவேக்குமார் தலைமையில் தேசியக்கொடி ஏந்தி பேருந்தில் பயணம் செய்யும் பயனாளிகளுக்கு லட்டு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர், நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் வைரமுத்து, ஒன்றியச் செயலாளர் நாக்கு முத்து, மின்னல் வேலுச்சாமி, பிரேம் ஆனந்த், மாரித்துரை, முத்தையா பாண்டி, கார்த்திக், முத்து ஆகியோர் கலந்து கொண்டு இனிப்பு வழங்கினர்.

# சங்கரன்கோவிலில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிட அடிக்கல் நாட்டு விழா

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில். ஆக.25-

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழநீலிதநல்லூர் கிராமத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார், கீழநீலிதநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் கோதை அம்மாள் பாபு முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணியை அடிக்கல் நாட்டி துவக்கிவைத்தார்.

இதில் கூட்டுறவு வங்கித் தலைவர் பாபு, மாவட்ட சிறுபான்மையினர் நல பிரிவுத் தலைவர் மரியலூர்யிஸ்பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் நல தலைவர் ராஜ் என்ற கருப்பசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன், மாவட்ட பிரதிநிதி சண்முக பாண்டியன், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ஜானகி,கிளை கழகச் செயலாளர்கள் முத்துராமலிங்கம் ,ராஜேந்திரன், மைனர்சாமி, பரஞ்சோதி, தங்கத்துரை இளைஞர் அணி சிவா, மாதவன், பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மதுரை அண்ணா நகரில் மதுரை மூன்று மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவர் அணி, மாணவர் அணி சார்பில் உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில் அமைச்சர் மூர்த்தி, எம்.எல்.ஏ. தளபதி, மாவட்டச் செயலாளர் மணிமாறன், எம்.எல்.ஏக்கள் வெங்கடேசன், பூமிநாதன் மற்றும் மேயர் இந்திராணி, பொன் முத்துராமலிங்கம், வேலுச்சாமி, குழந்தைவேலு, முத்துராமலிங்கம், ஜெயராம், மூவேந்திரன், தனச்செல்வம், முகேஷ் சர்மா, சௌந்தர்ராஜன், அன்பு, விமல், மருதுபாண்டி, அன்புமணி, வெங்கடேசன், சுப்பையா, தேவேந்திரன், ஆதவன், சுரேஷ், வசந்த், டாக்டர் விஷ்வா, செல்வமணி,அஜித் குமார் ஒன்றிய செயலாளர், சோமசுந்தரம், இளங்கோ, உசிலை சிவா, உசிலை சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டையில் பொது மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்



கந்தர்வகோட்டை, ஆக.25-

கிராம பொது இடத்தை தனி நபருக்கு பட்டா வழங்குவதை கண்டித்து கிராம பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கந்தர்வகோட்டையில் உடல் ஊனமுற்ற வயதுக்கு வந்தபெண்தனதுதந்தையுடன் புதுக்கோட்டை சாலையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் குடியிருந்து வருவதாகவும், தனக்கு குடியிருக்க வீடு வேண்டுமென மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து வந்த நிலையில் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் அவருக்காக கந்தர்வகோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கொத்தகம் கிராமத்தில் உள்ள ஊருக்கு பொதுவான இடத்தைதேர்வு செய்து அவருக்கு பட்டா வழங்க வருவாய் துறையினர் சுத்தம் செய்து வந்த நிலையில், கொத்தகம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு எங்கள் ஊருக்கு தேவையான அங்கன்வாடி கட்டடம், விளையாட்டு திடல், குடிநீர் தொட்டி இவைகள் அமைப்பதற்கு போதிய இடம் இல்லாமல் கிராம மக்கள் அவதிபட்டு வருகின்றோம், மேலும் எங்கள் கிராமத்தில் பல வருடங்களாக வீடு கட்டி குடியிருந்து வரும் பல பேருக்கு இன்னும் பட்டாவே வழங்காத நிலையில் கிராம பொது இடத்தில் கிராமத்திற்கு சம்பந்தமில்லாத தனி நபருக்கு எவ்வாறு பட்டா வழங்கலாம் என கூறுகின்றனர்.

முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் கந்தர்வகோட்டை சார்பு காவல் ஆய்வாளர் மார்ட்டின்ராஜ், வட்ட வழங்கள் அலுவலர் உத்திராபதி, வருவாய் ஆய்வாளர் சேகர் உள்ளிட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை செய்து உங்களது கோரிக்கை குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தி சரி செய்யப்படும் என உறுதி கூறியதன் பேரில் கிராமப் பொதுமக்கள் முற்றுகை போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# ம.பி, ராஜஸ்தான் உள்ளிட்ட 4 மாநிலங்களிலும் காங். வெல்லும் ராகுல் நம்பிக்கை

லடாக், ஆக. 25:

இந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய 4 மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



லடாக்கில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் ராகுல் காந்தி, அங்கு உள்ளூர் மக்கள், எல்லையில் பணிபுரியும் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்டோரைச் சந்தித்து அவர்ளோடு உரையாடினார்.இதனைத் தொடர்ந்து கார்கிலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராகுல் காந்தி, "காங்கிரஸ் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது.

இதேபோல், இந்த ஆண்டு இறுதிக்குள் சட்டப்பேரவைத்தேர்தல் நடைபெற உள்ள மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்" என்று தெரிவித்தார்.

# அரியலூர் மாவட்டம் தத்தனூர் எம் ஆர் சி கல்லூரி ஆளுமைத்திறன் வழிகாட்டுதல் கருத்தரங்கம்

அரியலூர் ஆக 24

தத்தனூர் எம் ஆர் சி கல்லூரி ஆளுமை திறன் வழிகாட்டுதல்கருத்தரங்கம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் நடத்திய ஆளுமைத்திறன் வழிகாட்டுதல் கருத்தரங்கம் நடைபெற்றது.

வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் கமலக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். தாளாளர் எம் ஆர் இரகுநாதன் தலைமை





தாங்கினார். இயக்குனர் முனைவர்ராஜமாணிக்கம் முன்னிலை வகித்து பேசினார். கல்லூரி முதல்வர் சேகர் மற்றும் துணை முதல்வர் சங்கீதா தொழிலதிபர் எபினேசர் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கருத்தரங்கில் அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கலைச்செல்வன் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் வினோத்குமார் உள்ளிட்டோர்

சிறப்புரையாற்றினார்கள். கல்லூரி பேராசிரியர் ஜெயபிரகாசு நன்றியுரை கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# டாஸ்மாக் கடைகளில் அவசரகதியில் வைக்கப்பட்ட விலை பட்டியல் உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் கடும் அதிருப்தி

மதுரை, ஆக. 25:

தமிழகத்தில் மதுபான விற்பனை நேரத்தைக் குறைக்க வலியுறுத்தி, உயர் நீதிமன்றக் கிளையில் கே.கே. ரமேஷ் என்பவர் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற அமர்வு, மது வாங்குவோருக்கு அடையாள அட்டை வழங்கும் நடைமுறையை அமல்படுத்த வேண்டும், அட்டை வைத்துள்ளோருக்கு மட்டுமே மதுபானங்களை விற்பனை செய்ய வேண்டும், மது பாட்டிலின் மீதுள்ள லேபிள்களில் விலை விவரம், புகார் தெரிவிக்க வேண்டிய எண் ஆகியவற்றை தமிழில் அச்சிட்டு ஒட்ட வேண்டும், மது விற்பனை நேரத்தை பிற்பகல் 2 முதல் இரவு 8 மணி வரை குறைக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்த உத்தரவை அமல்படுத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கே.கே. ரமேஷ், உயர் நீதிமன்றக் கிளையில் நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்தார். இதை விசாரித்த நீதிபதிகள், மதுரையில் டாஸ்மாக் கடைகளில் அனைவருக்கும் தெரியும் வகையில் விலைப் பட்டியல் வைக்கப்பட்டுள்ளதா என்பதை வழக்கறிஞர்கள் குழு ஆய்வு செய்து, அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரதசக்கரவர்த்தி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கறிஞர் குழு, தாங்கள் ஆய்வுசெய்த டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களின் விலைப் பட்டியல் வைத்திருப்பது தொடர்பாக, புகைப்படங்களுடன் அறிக்கை தாக்கல் செய்தது.

அதில், மதுரை மாவட்டம் திருமங்கலம், செக்கானூரணி, வாடிப்பட்டி குருவிக்காரன்சாலை, கே.கே. நகர், மாட்டுத்தாவணி, பீபீகுளம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் டாஸ்மாக் கடைகளில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. அங்கு மதுபானங்களின் விலைப்பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

டாஸ்மாக் தரப்பில், கூடுதல் விலைக்கு மதுபானம் விற்பனை செய்தது தொடர்பாக 35 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "வழக்கறிஞர் குழு ஆய்வை, முன்கூட்டியே தெரிந்துகொண்டு அவசரகதியில் விலைப்பட்டியல் வைக்கப்பட்டிருப்பது, அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்களைப் பார்க்கும்போது தெரிகிறது. டாஸ்மாக் கடைகளில் நிரந்தரமாக மதுபானங்களின் விலைப்பட்டியல் வைக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

## கருப்புக் கொடி போராட்டத்தை

# கைவிட்ட பின் முதல்வர் ஸ்டாலினிடம் நேரில் மனு அளித்த கரும்பு விவசாயிகள்

தஞ்சாவூர், ஆக. 25:

தஞ்சாவூருக்கு வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக கருப்பு கொடி காட்ட முயன்ற கரும்பு விவசாயிகள் நேற்று தமிழக முதல்வரை சாலையோரமாக நின்று நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகேதிருமண்டங்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகத்தை கண்டித்தும் மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 268 நாட்களாக விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகதஞ்சை வழியாக மயிலாடுதுறை செல்லும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை தந்தார்.



முதல்வர் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு வருகை தரும்போது அவருக்கு எதிராக கருப்பு கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபடுவதாக விவசாயிகள்ஏற்கெனவே அறிவித்திருந்தனர். இதைஅடுத்துபோலீசார் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை கருப்புக் கொடி காட்ட விடாமல் சாலியமங்கலம் அருகே சாலையோரமாக நின்று முதல்வரை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்தனர். அதன்படி, நேற்று மதியம் சாலியமங்கலத்தில் கரும்பு விவசாயிகளை சந்தித்து அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "திருஆரூரான் சக்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை சுமார் 100 கோடி. அதேபோல் விவசாயிகளின் பெயரில் மோசடியாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சுமார் ரூ.300 கோடி கடன் பெற்றுள்ளது. அந்தக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். ஆலை நிர்வாகத்தை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 268 நாட்களாக போராடி வருகிறோம். இந்நிலையில், இதன் ஒரு பகுதியாக போராடி வரும் விவசாயிகள் தமிழக முதல்வரை நேரில் சந்தித்து மனு அளித்துள்ளோம்" என்றனர்.

## கந்தர்வகோட்டை அரசு பள்ளியில்

# சந்திரயான் வெற்றியை இனிப்பு வழங்கி கொண்டாடிய பாஜகவினர்

கந்தர்வகோட்டை, ஆக. 25:

கந்தர்வகோட்டை அரசு பள்ளியில் சந்திரயான் வெற்றியை இனிப்பு வழங்கி பாஜகவினர் கொண்டாடினர். சந்திராயன் - 3 விண்கலம் வெற்றியைகொண்டாடும் விதமாக பாஜக ஒன்றிய தலைவர் டி.ஆர்.தவமணி ஆலோசனையின் பேரில் வர்த்தக பிரிவு மாவட்ட செயலாளர் அய்யா. இளங்கோவன், வர்த்தக பிரிவு ஒன்றிய துணைத் தலைவர் சி.கார்த்தி ஆகியோர் முன்னிலையில். கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில்



குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ச்சி பகிர்ந்து கொண்டடினர்.

நிகழ்ச்சியில் வர்த்தக பிரிவு ஒன்றிய செயலாளர்கள் க.ரமேஷ், சரவணன், மனோகரன், அசோக் மற்றும் தலைமை ஆசிரியர் சோ.விஜயலட்சுமி, ஆசிரியர் பாக்கியராஜ் மற்றும் பள்ளி நிர்வாகிகளும் கலந்து கொண்டுசிறப்பித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# செஸ் இறுதிப்போட்டியில் பிரக்ஞானந்தா வெள்ளி பதக்கம் வென்று சாதனை

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் 6 புதிய நாடுகள் இணைகின்றன






# கோடநாடு வழக்கு: இபிஎஸ்ஐ விசாரிக்க வேண்டும்: கனகராஜ் சகோதரர்


சென்னை / புதுக்கோட்டை | 25.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

எஸ். வரலட்சுமி , தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி (பி.1929)



ராம் புனியானி , இந்திய உயிரிமருத்துவர் (பி.1945)



விஜயகாந்த் , தமிழக நடிகர், அரசியல்வாதி (பி.1952)



எம். ஆர். கே. பன்னீர்செல்வம் , தமிழக அரசியல்வாதி (பி.1957)



## இன்றைய நினைவு நாள்

வ. சு. செங்கல்வராய பிள்ளை , தமிழறிஞர் (பி.1883) (இ.1971)



எஸ். ஏ. விக்கிரமசிங்க , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1901) (இ.1981)



தா. இராமலிங்கம் , ஈழத்துக் கவிஞர் (பி.1933) (இ.2008)

